செய்தி வெளியீடு எண்.326 நாள். 26.6.2009

## செய்தி வெளியீடு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் இரண்டாண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தின் கீழ் பணியாற்றி வரும் ஊனமுற்றோருக்கு காலமுறை ஊதியம் வழங்கப்படும் என அறிவித்தார்கள். இவ்வறிப்பினைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண். 151 சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள். 16.10.2008 வெளியிடப்பட்டது.

சமூக நலத் துறையில், அரசு குழந்தைகள் காப்பகங்கள், அரசு சேவை இல்லங்கள் மற்றும் அரசு பணிபுரியும் பெண்கள் விடுதிகளில் தொகுப்பூதியத்தின் கீழ் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்களில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தின் கீழ் பணியாற்றி வரும் ஊனமுற்றோருக்கு தகுதியின் அடிப்படையில் காலமுறை ஊதியம் பெற நியமனம் செய்து அதற்கான ஆணையினை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், இன்று (26.6.2009) வழங்கினார்கள்.

*************

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9